# கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
# Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

*பங்குனி மாத இதழ்*
*NEWS BULLETIN*
*MARCH 2020*
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்


| நாள் | நிகழ்வு |
|---|---|
| 14/03/2020 முதல் | கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினால், நடாத்தப்பட்டு வருகின்ற தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் அனைத்துக் கற்பித்தல் செயற்பாடுகளும், உலகெங்கும் வேகமாக பரவி வரும் "கொரோணா" தொற்றிலிருந்து எல்லோரையும் பாதுகாக்கும் பொருட்டு, மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. |
| 21/06/2020 | OFAAL செய்முறைப் பரீட்சை (Practical Exam) |
| 04/07/2020 | OFAAL எழுத்துப் பரீட்சை (Theory Exam) |

## வீட்டிலேயே இருப்போம்!
## கொரோணாவை ஒழிப்போம்!


இன்றைய உலகில் மிக வேகமாக பரவி வரும் கொடிய நோயான கொரோணா பரவுவதை தடுக்கும் முகமாக, பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் அனைத்து நாடுகளும் தமது மக்களை வீடுகளிலேயே இருந்து அந்த நோய் பரவும் வீதத்தைத் தடுப்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டி நிற்கின்றன.

ஒருசில முக்கியமான வேலைகளைத் தவிர அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்பட்ட நிலையில், மக்களாகிய நாங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லாது, எமது அன்புக்குரிய குடும்ப அங்கத்தவர்களுடன் வீடுகளிலேயே தங்கியிருப்போம். மிக முக்கியமாகத் தேவைப்படும் பொருட்களை மட்டும் வாங்குவதற்குக் குடும்பத்தில் உள்ள ஒருவர் மட்டும் வெளியே செல்வோம்.

வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதுடன், அடிக்கடி கைகளைச் சோப்பிட்டு நன்கு கழுவி, கொரோணாத் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.




.



## சர்வதேச மகளீர் தினமன்று சாதனைப் பெண்களுக்கு விருது

இனிய நந்தவனம் இதழ் உலகளாவிய ரீதியில், சாதனைப் பெண்களுக்கு சர்வதேச மகளீர் தினமான 08/03/2020 அன்று இந்தியாவிலுள்ள, சென்னை மாநகரிலே விருது வழங்கிச் சிறப்பித்தது.

இதில் பத்து நாடுகளிலிருந்து 75 ற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலித்து, பல துறைகளில் தடம் பதித்த பெண்களில், 24 பேர் விருதுக்குத் தகுதி பெற்று விழாவில் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்..

அந்தவகையில், இங்கிலாந்திலிருந்து சென்று, இந்த சாதனை விருதினைப் பெற்று எல்லோருக்கும் பெருமை சேர்த்த, கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையின் தலைமையாசிரியை **திருமதி ரஜனி உதயசேகரன்** அவர்களுக்கும்,

அந்த நிகழ்விலே கலந்துகொண்ட, தமிழ்ப் பாடசாலையின் ஆசிரியையும், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினருமான **திருமதி ரஜனி ஜோன்சன்** அவர்களுக்கும் தமிழர் நலன்புரிச் சங்கம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.








## பாரதி கண்ட புதுமைப்பெண்

***"பெண் ஒரு சமூகத்தின் கண்"*** என்பார்கள். ஆனால், இப்பெண்களை முற்காலத்தில் ஆண்கள் மனிதகுலத்தின் ஈனப்பிறவிகளாகப் பார்த்தனர். பெண்கள் கல்வி கற்கக் கூடாது என்றும் அவர்கள் அடுப்படியில் அடிமைகளாகக் கிடந்து தனது குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றப் பயன்படும் ஓர் உயிருள்ள ஜடமாகவே கருதினர் அன்றைய ஆணாதிக்க சமூகத்தினர்.

ஆனால் காலஞ் செல்லச் செல்ல, பாரதி போன்ற புரட்சிக் கவிஞர்கள் பெண் விடுதலைக்குக் குரல் எழுப்பினர்

***"பட்டங்கள் ஆளவும்***
***சட்டங்கள் செய்யவும் பாரினிலே***
***பெண்கள் பிறந்து வந்தோம்***
***எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்"***

என்ற பாரதியின் பாடல் நிறைவேறியது என்றே கூறமுடியும். ஏனெனில் இன்று பெண்கள் எல்லாத் துறைகளிலும் கல்வி கற்கின்றனர். விவசாயம் தொடக்கம் விண்வெளி வரையிலும் சென்றுவிட்டார்கள்.

***"நிமிர்ந்த நன்னடை***
***நேர்கொண்ட பார்வை"***

என்று பாரதி பாடியது போன்று, எதற்கும் அஞ்சாதவர்களாக நிமிர்ந்து, முன்னேறிச் செல்லும் ஒரு சமூகமாக எமது பெண் சமூகம் மாறியிருப்பது பெருமைக்குரியதே.

எனினும், இன்றும் கூட சில நாடுகளில் பெண்ணடிமைத்தனம், அவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற பல வன்முறைகள் நடைபெறாமல் இல்லை. இவை கண்டிக்கப்பட வேண்டியவை ஆகும். ஆம் பாரதியின் கனவை மேலும் நிறைவேற்ற, நிமிர்ந்து நின்று பல சாதனைகள் செய்து சரித்திரம் படைப்போம்!
வாழ்க பெண்குலம்!

நன்றி
ஜினுஜா குகநாதன்
தரம் 07